**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க..எண். 2503/ஆ5/2025, நாள்.04/06/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு – போதை எதிர்ப்பு மன்றச் செயல்பாடுகள் – 2025–2026 மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சி – உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 52 உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (XVI) துறை நாள். 14.10.2024
2. உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமை செயலர் அவர்களின் கடித எண்.13366/H.P&E(XVI)/2025–1, நாள். 02.06.2025
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00185/எம்/இ1/2024, நாள். 09.08.2023
4. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.00882/எம்1/இ1/2023, நாள். 26.05.2025
5. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00185/எம்/இ1/2025, நாள். 03.06.2025

•••••

பார்வை 5–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான சமூக விழிப்புணர்வு வலுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையில் அனைத்து வகை பள்ளிகளிலும் 6 முதல் 12ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களுக்கு போதைப் பொருட்கள் பயன்பாட்டை தவிர்த்தல் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்திட போதை எதிர்ப்பு மன்றங்கள் (Anti Drug Clubs) அமைக்கப்பட்டுள்ளன.

பார்வை 1–ல் காணும் அரசாணையில் போதை எதிர்ப்பு மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, போதை எதிர்ப்பு மன்றச் செயல்பாடுகள் 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் பள்ளிகளில் செயல்படுத்த அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பார்வை 2–ல் காணும் கடிதத்தில் அரசு தலைமை செயலர் அவர்களால் போதைப் பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தவிர்ப்பது சார்ந்து மாணவர்களுக்கு புத்தாக்க பயிற்சியினை 06.06.2025–க்குள் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பள்ளி அளவில் செயல்படும் போதை எதிர்ப்பு மன்ற ஆசிரியர் பொறுப்பாளர்களுக்கு 26.03.2025 அன்று மாவட்ட பயிற்சியாளர்கள் (Mater Trainers) மூலமாக இணையவழியில் (google meet) பயிற்சிகள் வழங்கப்பட்டது.

அனைத்து 6 முதல் 12ஆம் வகுப்பு உடைய அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர்களுக்கு போதை எதிர்ப்பு மன்றச் செயல்பாடுகளுக்கான புத்தாக்க பயிற்சி நடைபெறுவதை நன்கு திட்டமிட்டு நடத்திடவும், மேலும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது. உடல் நலம் மற்றும் குடும்ப நலத்துறை, காவல்துறை, மக்கள் செய்தித் தொடர்பு அலுவலர் உள்ளிட்ட பிற துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட தெரிவிக்கப்படுகிறது. காவல் துறை மற்றும் மருத்துவ அலுவலர்கள் வல்லுநர்களை பங்கேற் தக்க வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அளவில் அலுவலர்கள் பள்ளிகளை பார்வையிட்டு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு (I) உள்ள படிவத்தினை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஜுன் 2 முதல் பள்ளி அளவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் சார்ந்து Fortnight Report Format இணைப்பு (II) உள்ளவாறு பள்ளிகளிடமிருந்து பெற்று பூர்த்தி செய்து 16.06.2025 அன்று மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மேற்காணும்படி இணைப்பு (I) மற்றும் இணைப்பு (II) உள்ள படிவங்களை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு உரிய காலத்திற்குள் அனுப்ப வேண்டியுள்ளதால், நினைவூட்டுக்கு இடமளிக்காமல் இப்பொருளின் மீது தனி கவனம் செலுத்தி இவ்வலுவலகத்தில் தவறாமல் சமர்பிக்க மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளி) மீள தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் உள்ள குறிப்பேடு மற்றும் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி பள்ளி அளவில் மாணவர்களுக்கு 06.06.2025-க்குள் புத்தாக்க பயிற்சி வழங்கும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை அன்று காலை வணக்கக் கூட்டத்தில் 6 முதல் 12 வகுப்பு உள்ள பள்ளிகளில் போதை எதிர்ப்பு சார்ந்து தகவலகள் / கருத்து பரிமாற்றம் சார்ந்து பேச்சு / கவிதை / சுவரொட்டி / நாடகம் / பாட்டு / திருக்குறள் கதைகள் இடம்பெறலாம்.

மேலும் இப்பொருள் சார்பாக பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க பயிற்சின் புகைப்படத்தினையும், ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை அன்று பள்ளிகளில் போதை எதிர்ப்பு மன்றச் செயல்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சியின் புகைப்பட நகலினை b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் அனுப்பி வைக்க அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. இணைப்பு (I) மற்றும் இணைப்பு (II)
2. பார்வை 1ல் காணும் அரசாணை
3. பார்வை 2 முதல் 5 வரை உள்ள செயல்முறைகள்
4. போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி
5. தமிழ் மற்றும் ஆங்கிய மொழியில் உள்ள குறிப்பேடு

(முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி),
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலை/ நடுநிலை மற்றும் தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
(சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

இணைப்பு – I

மாவட்டம் –

பார்வை நாள் –

| வ. எண். | பள்ளியின் பெயர் | பயிற்சி பெற்ற மாணவர் எண்ணிக்கை | குறிப்புரை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

அலுவலர் கையொப்பம்
(அலுவலர் பெயர் மற்றும் பதவியுடன்)

இணைப்பு – II

Name of the District -

| S. No. | School Name | Anti Drug Clubs Started till date | No. of Activities conducted by Anti Drug Clubs during the fortnight | No. of Activities conducted by NCC / NSS during the fortnight | No. of Students participated in the activities during the fortnight | | | No. pf NDPS hotsports identified near educational institutions and reported to police |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ADCs | NCC / NSS | Total | |
| | | | | | | | | |

அலுவலர் கையொப்பம்
(அலுவலர் பெயர் மற்றும் பதவியுடன்)